# IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI

MCOP.No.40/2018 Date: 24.04.2025.

PW3-செந்தில்குமார்

சாட்சி மீண்டும் முன்னிலையானதின் பேரில் 2 ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:

நான் 6 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். ம.சா.ஆ.14 யை நான் தான் கொடுத்தேன். ஆனால் அதில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. அது எந்த தேதியில் எழுதப்பட்டது என்றும் எனக்கு தெரியாது. போர்வெல் லாரிக்கு நான் பங்குதாரராக உள்ளேன். ம.சா.ஆ.14 ல் குறிப்பிடப்பட்டுள்ள அலைபேசி எண்ணை பற்றி எனக்கு தெரியாது. ம.சா.ஆ.14 யை இறந்து போன நபருக்காக என்னுடைய பங்குதாரர் கொடுத்துள்ளார். அதிலுள்ள கையெழுத்து யாருடையது என்று எனக்கு தெரியாது. அதை என்னிடம் 2 ம் மனுதாரர் தான் கொடுத்தார். இறந்து போனவரின் உறவினர்கள் யாரும் எங்களது லாரி வண்டியில் வேலை செய்யவில்லை. ம.சா.ஆ.15 யை இறந்து போனவரின் அண்ணனுடைய கைபேசியிலிருந்து எடுக்கப்பட்டது. இறந்து போனவர் யார் என்றால் கோபி தான் இறந்தவர். நான் SKT போர்வெல்லில் பங்குதாரர் என சொல்வது பொய் என்றால் சரியல்ல. நாங்கள் இறந்து போன கோபிக்கு மாதம் ரூ.18 ஆயிரம் சம்பளம் கொடுத்ததாக சொல்வதும் பொய் என்றால் சரியல்ல. நான் மனுதாரர்கள் கேட்டுக்கொண்டதற்காக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

ஒப்பம்/-செந்தில்குமார் ஒப்பம்/-திரு.ந.பன்னீர்செல்வம்,

சார்பு நீதிபதி, சங்ககிரி.